# ஆழ்வார்கள் - ஒரு பன்முக நோக்கு

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## ஆய்வுக்கோவை

முதுகலை - தமிழ் உயராய்வு மையம்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

ஜூலை 24, 25 - 2017

# பொருளடக்கம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | வாசு அரங்கநாதன் | ஆழ்வார்கள் இலக்கியங்களில் இலக்கியத் திறனும் ஆழ்நிலை பக்தியும் | 1 |
| 2. | பாரதி சங்கர ராஜுலு | கோதையின் கனவு | 11 |
| 3. | இரத்தின வேங்கடேசன் | கோனேரியில் வாழும் குருகு | 14 |
| 4. | எம்.எஸ். ஸ்ரீலட்சுமி | குலசேகரரும் இராமாவதாரமும் | 17 |
| 5. | விமலா | ஆண்டாளின் ஆளுமைகள் | 21 |
| 6. | அருன் ராஜேந்திரன் | காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் | 22 |
| 7. | திருமதி. பத்மாவதி | கூரத்தாழ்வாரும் அவரது ராமானுஜ பக்தியும் | 24 |
| 8. | ப. அனுராதா | பாவை காட்டும் பாவை | 26 |
| 9. | M. S. புனிதவதி | திருக்கோட்டியூர் சிறப்பும் இராமானுசரின் பொதுவுடைமையும் | 28 |
| 10. | வா.மு.சே. ஆண்டவர் | ஆண்டாளின் அகத்திணைப் புதுமையாக்கம் | 31 |
| 11. | ச. உமா | திருப்பாவையில் வீரம் | 33 |
| 12. | செ. விஜயலட்சுமி | ஸ்ரீராமானுஜர்: ஸ்ரீவைணவமும் மனித மாண்புகளும் | 36 |
| 13. | ந.பழனிசாமி | ஆழ்வார்கள் அனுபவித்த ஆயர்பாடி அதிபதி | 39 |
| 14. | சி. சுந்தரமூர்த்தி | இறைமாண்புகள் | 43 |
| 15. | தீ. சீலா | கண்ணனைப் போற்றும் நம்மாழ்வார் | 45 |
| 16. | ச. மலர்விழி | தமிழ் வளர்ச்சியில் வைணவ சமயம் | 47 |
| 17. | கோ. சத்யா தேவி | முதலாழ்வார்களின் பக்தி நெறி | 50 |
| 18. | கோ.இரமேஷ் | ஆழ்வார்களும், சமயத் தொண்டும் | 52 |
| 19. | சு. உத்தமகுமார் | இலக்கியங்களில் திருமால் | 55 |
| 20. | சு.கார்த்திகேயன் | திருமழிசையாழ்வாரும் இறையனுபவமும் | 57 |
| 21. | இரா.சு. உதயகுமார் | மதுரகவி ஆழ்வாரின் வாழ்வும் குரு பக்தியும் | 60 |
| 22. | பா. முத்துச்சாமி | மறுவாசிப்பில் - கோதிலாக் கோதைநாச்சியார் | 63 |
| 23. | இல. செ. திருமலை | வைணவம் : ஒரு மக்கள் இலக்கியம் | 65 |
| 24. | ந. செந்தில்குமார் | நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் மனித நேயம் | 67 |
| 25. | ம.தங்கராசு | திருமாலின் பன்னிரு திருநாமம் பெருமைகள் | 69 |
| 26. | க. ச. ஸ்ரீதர் | சமயத் தொண்டில் ஸ்ரீ இராமாநுஜரின் தனித்துவம் | 73 |
| 27. | க.சேகர் | பக்தனும் ஆழ்வாராகலாம் | 75 |
| 28. | ப. தாமரைக்கண்ணன் | திருமாலின் திருவடி முதல் திருமுடி வரை (பாதாதிகேசம்) | 77 |
| 29. | கே.தயாநிதி | ஸ்ரீ வேதாந்ததேசிகன் வைபவம் | 80 |
| 30. | சொ. மகாதேவன் | வைணவமும் கிராமத்திய மரபுமும் | 84 |
| 31. | மு. பழனியப்பன் | என்னைப் புவியில் ஒரு பொருளாக்கியவர் இராமானுஜர் | 86 |
| 32. | இராகவன் கண்ணன் | வடவரங்க ஆற்றுப்படை | 88 |
| 33. | இரத்தின இம்மானுவேல் | வைணவ அவதாரங்களில் இறைத்தத்துவத்தின் மணம் | 95 |
| 34. | சீ. மங்கையர்க்கரசி | திருப்பாணாழ்வார் கண்ட அரங்கள் திருக்கோலம் | 98 |
| 35. | சி.அருள் மைக்கேல் செல்வி | தொண்டரடிப்பொடியாழ்வார் - ஒரு பன்முக நோக்கு | 100 |
| 36. | சாந்தி. ப | ஆண்டாள் பாடல்களில் பெண்மனம் | 103 |
| 37. | எம்.எஸ்.ஸ்ரீகாந்த் | ஸ்ரீமதே ராமாநுஜாய நம: உய்ய ஒரே வழி உடையவர் திருவடி | 105 |
| 38. | பா.அ.முனுசாமி | பெரியாழ்வாரின் தாலாட்டில் இறைவன் | 107 |
| 39. | ப. தனஞ்செயன் | சிந்தைக் கவர்ந்த அழகு | 109 |
| 40. | சி. கண்மணி | பெரியாழ்வார் பாசுரங்களில் வெளிப்படும் தாய்மை உணர்வு நிலை | 112 |
| 41. | ஜா. திரிபுரசூடாமணி | வைணவச் செல்வம் சீவக சிந்தாமணி | 114 |
| 42. | சண்டமாருதம் | கையில் கனி | 116 |
| 43. | எஸ்.கணேச மூர்த்தி | பெரியாழ்வார் திருமொழியில் நாட்டுபுறக்கலைகள் | 120 |
| 44. | இ.ரவி | ஆண்டாள் – ஒரு பின்நவீனத்துவப் பார்வை | 122 |
| 45. | பி.அம்முதேவி | ஆண்டாளின் மன(ண)தை ஆட்(ட்கொ)ண்டவன் | 124 |
| 46. | பா.கௌசல்யா | நீரே என் அடைக்கலம் (சரணாகதி-ஆழ்வார்களின் பார்வையில்) | 127 |
| 47. | ஆர். பிரபாகரன் | தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட இலக்கியங்களில் வைணவம் | 130 |
| 48. | த.வ.சுவாமிநாதன் | வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் | 134 |
| 49. | ப.முருகன் | துயிலெழல் - பாவை பாடல்களிலும் பள்ளி எழுச்சிப் பாடல்களிலும்.. | 137 |
| 50. | ஜி. நரசிம்மன் | ஆழ்வார்களும் கல்வெட்டும் | 140 |
| 51. | ஜான் மனுவேல் | வைணவ தத்துவக் கருத்துக்கள் | 145 |
| 52. | வி.ஜி. சொக்கலிங்கம் | நம்மாழ்வாரின் வாழ்வியல் சிந்தனைகள் | 147 |
| 53. | தீபலெட்சுமி | தமிழ் இலக்கியங்களில் திருமணமும் ஆண்டாளின் திருமண முறையும் | 149 |

முனைவர் திருமதி சி. அருள் மைக்கேல் செல்வி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமாக் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 625 018.
அலைபேசி: 9751488492



## 35. தொண்டரடிப்பொடியாழ்வார் - ஒரு பன்முக நோக்கு

**முன்னுரை:**

பழம் பெருமை வாய்ந்த நம் பாரதநாட்டில் நிலைபெற்றிருந்த அறுவேறு சமயங்களில் வைணவ சமயமும் ஒன்று ஆகும். நானிலப் பெயரிட்டு வழங்கியபோதே திருமால் வழிபாடு இருந்ததை, *'மாயோன் மேய காடுறை உலகமும்'* என்ற தொல்காப்பியத் தொடரால் அறிய முடிகின்றது. *'பூவிற்குத் தாமரையே பொன்னிற்குச் சாம்புனதம் ஆவிற்கு அருமுனியா யானைக்கு அமரரும் பல்தேவிற்றிருமால் எனச் சிறந்தது என்பவே'* என்று திருவள்ளுவமாலையும் குறிப்பிடுகின்றது. திருமாலை வணங்கும் கொள்கை மணிமேகலைக் காப்பியம் தோன்றிய காலத்தில் இருந்தே இருந்ததை, *'காதல் கொண்ட கடல்வணன் புராணம் ஓதினன் நாரணன் காப்பு என்று உரைத்தனன்'*, என்கிறார் சாத்தனார். இத்திருமால், உலக உயிர்களைக் காக்கும் பொருட்டுப் பூவுலகிற்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களே ஆழ்வார்கள் என்பர்.

**ஆழ்வார்கள்:**

ஆதியும் அந்தமும் கடந்த விருப்பு வெறுப்பு இல்லாத மூலப்பரம்பொருளை உள்ளவாறு உணர்ந்து அப்பரமனின் பெருமையால் ஊன்றித் திளைத்து மகிழ்ந்தவர்கள் ஆழ்வார்கள். வைணவ சமயத்தை வாழ்விக்க வந்த பெரியோர்களை ஆழ்வார்கள் என்றும் ஆசாரியர்கள் என்றும் கூறுவர். இவர்களுள் 'பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களை ஆழ்வார்கள்' என்று பொதுவாகக் கூறுவர். இவர்கள் பன்னிருவர் என்பதை,

*□பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை*
*அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யப்பட்ட*
*நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நன்கலியன்*
*ஈதிவர் தோற்றத்தடை வாமிங்கு* என்ற மணவாள மாமுனிகளின் உபதேசமாலைப் பாடலால் அறியமுடிகின்றது. இப்பன்னிருவருள் தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஒருவர் ஆவார்.

**தொண்டரடிப்பொடியாழ்வார்:**

*தெண்திரை சூழ் அரங்கரையே தெய்வம் என்றான் வாழியே*
*திருமாலை ஒன்பதஞ்சும் செப்பினான் வாழியே*
*பண்டு திருப்பள்ளி எழுச்சி பத்துரைத்தான் வாழியே* என்று அப்பிள்ளை அடியாரால் போற்றித் துதிக்கப்பட்ட ஆழ்வார் தொண்டடிரப்பொடியாழ்வார் ஆவார். மண்டங்குடி என்னும் ஊரில் மார்கழி மாதத்துக் கேட்டை நட்சத்திரத்தில் அவதரித்த இவர் திருமங்கையாழ்வாரின் சமகாலத்தவர். விப்பிரநாராயணர் என்ற இயற்பெயரை உடையவர். துன்பெயரைத் தொண்டரடிப்பொடி என்று மாற்றிக்கொண்டவர். இதனை,

*'தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து*
*தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்றும் அடியனை'* என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாடல் அடிகளால் அறியலாம். *'வனமாலை'*யின் அம்சமாக அவதரித்தவர். தமிழின் முதல் *'சுப்ரபாதம்'* ஆகிய திருப்பள்ளி எழுச்சி பாடிய இவர் திருமாலுக்குத் திருமாலை கட்டி *'திருமாலை'* என்ற பிரபந்தத்தையும் அருளிச் செய்தவர். இவ்விரு நூல்களிலும் திருவரங்கம் குறித்தும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலின் தோற்றம் குறித்தும் பாடுகின்ற ஆழ்வார், தன் நிலை குறித்தும் பாடுகின்றார். இப்பாடல்களில் புராணச் செய்திகளும், சமண, பௌத்த, சைவமதச் சாடல்களும் இடம்பெற்றுள்ளன.

**திருவரங்கம்:**

திருமால் எழுந்தருளியிருக்கின்ற வைணவத் தலங்கள் 108 ஆகும். இத்தலங்களுள் மேன்மை பொருந்திய திருநாமங்களை உடைய பெருமானாகிய திருமாலின் திவ்விய தேசம் *'திருவரங்கம்'* என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். இதனை *'நரகமே சுவர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பி அவனது ஊர் அரங்கம்'* (பா.12) என்ற பாடலடியால் அறியலாம். திருமால் தன் அருளினால், உலகத்தில் உள்ளவர்கள் உய்வதற்கு ஏற்ற இடமாகக் காட்டியருளிய இடம் திருவரங்கம் ஆகும். *அழகன் ஊர் அரங்கம்* (பா.15,16), *சேவகனார் மருவிய பெரிய கோயில் மதிள் திருவரங்கம்* (பா.11), *கரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கம்* (பா.17), பாயும் நீர் அரங்கம் (பா.20), பொன்னி சூழ் திருவரங்கம் (பா.30), *நீர் சூழ் திருவரங்கம்* (பா.37), *சூழ் புனல் அரங்கம்* (பா.38), *மதிள் திரு அரங்கம்* (பா.42) என்றெல்லாம் பாடப்பட்டுள்ளன. தேவர்களுக்குத் தலைவனான அரங்கநாதன்

ISBN: 978-93-5265-628-8